**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

MCOP.No.:177/2016 Date:24.03.2022

பெயர்-வடிவேல்(PW1)

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

விபத்தில் எனக்கு தான் அடிபட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் எனது 2 சக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா? என்றால் இருந்தது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஓட்டுநர் உரிமத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், அது விபத்து சமயத்தில் தொலைந்துவிட்டது. எனது வாகனத்திற்கு காப்பீடும், எனக்கு ஓட்டுநர் உரிமமும் கிடையாது என்றும், அதனால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் வாகனத்தை ஆய்வு செய்த ஆய்வறிக்கையையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையானது பொருண்மைபிழை என்ற காரணத்தினால் முடிக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பிவிட்டு சாலையை கடக்கும் போது, நான் தான் சரியாக கவனிக்காமல் அந்த வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்றும் அதனால் தான் போலீசார் பொருண்மைபிழை என வழக்கை முடித்துள்ளனர் என்றால் சரியல்ல. எனக்கு விவசாய நிலம் 1 ஏக்கர் உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 5 ஏக்கர் இருப்பது பொய் என்றால் எனது பாட்டி வீட்டில் உள்ளது. நான் வேலை செய்யும் இடத்திலேயே தங்கி கொள்வேன் என்றும், வீட்டிற்கு வருவதில்லை என்றால் சரியல்ல. வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் வருவேன். எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் நான் தங்கியிருந்து வேலை பார்ப்பதாக கூறியுள்ளேன் என்றும், தற்போது வழக்கிற்காக வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் வீட்டிற்கு வருவேன் என்று பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விவசாய நிலங்கள் இல்லை என்றும், இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் அவினாசியில் தங்கி வேலை செய்ததன் மூலமும், விவசாயத்தின் மூலமும், மாதம் ரூ.25000/-ற்கு மேல் சம்பாதித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் நடந்ததால் 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

Sd/-Vadivel,

Sd/-S.Uma Maheswari,
Sub Judge, Sankari.